
தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16



ஜனவரி ௨௦௦௯

...ரம் 9
...ணி 2

B. அர்ஜுனன்

## யோவான்ஸ்நானன் – JOHN THE BAPTIST



- தகப்பன் சகரியா, தாய் எலிசபெத் - லூக்.1:59
- தேவனால் அனுப்பப்பட்டவன் - யோவா.1:6ன்
- ஏசாயா தீர்க்கதரிசனத்தில் சொல்லப்பட்டவன் - ஏசா.40:3
- இயேசுவை குறித்து சாட்சிகொடுக்க வந்தவன் - யோவா.1:8
- மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைக் குறித்துப் பிரசங்கித்தவன் - மாற்.1:4
- ஒட்டகமயிர் உடை தரித்திருந்தான், வெட்டுக்கிளியும் காட்டுத்தேனும் அவனது ஆகாரம் - மாற்.1:6
- இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுத்தவன் - மத்.3:16
- எலியாவின் ஆவியும் பலமும் உடையவன் - லூக்.1:17
- அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டுமென்றவன் - யோவா.3:30
- இறுதியில் சிரச்சேதம் பண்ணப்பட்டான் - மத்.14:10






## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்-2009

வருட காலண்டர் தேவைப்படுவோர்
உங்களுடைய பதிவு எண்ணுடன்
***Rs.10/- M.O*** செய்யுங்கள்.
உங்கள் வீடு தேடி வரும்.
குறிப்பு: சந்தாதாரர்களுக்கு இலவசமாக அனுப்பப்படும்

### கிறிஸ்துவின் வசனம்
### *வழங்கும்*
### *தொலைக்காட்சி நிகழ்ச்சி*




தமிழன் ***TV*** யில் திங்கள் காலை 6.00 - 6.15
இமயம் ***TV*** யில் செவ்வாய் காலை 6.30 - 6.45
இமயம் ***TV*** யில் வியாழன் காலை 6.15 - 6.30



### *ரேடியோ நிகழ்ச்சி*

இலங்கை ஆசிய சேவை ***SW25*** மற்றும் 41 மீட்டரில்
ஒவ்வொரு புதன் மாலை 5.45 முதல் 6.00 மணி வரை



**கேட்டு சத்தியத்தை அறிந்து கொள்ளுங்கள்**

"Go ye into all the world, and preach the gospel to every creature"
Mark 16:15.
"The Churches Of Christ salute you" Romans 16:16

**Published by**
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

# திவேர்ட் ஆப் கிரைஸ்ட்

## THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 9 ஜனவரி - 2009 கனி - 2


ஆசிரியருரை

# அழைக்கப்பட்டவர்கள் அநேகர்

## *For Many Are Called*



புது வருட துவக்கத்தில் இச்செய்தி மூலமாக உங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறோம். நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரியங்களுக்காக அழைக்கப் படுகிறோம். திருமணம், பிறந்தநாள், இதுபோன்ற அநேக அழைப்புக்கள் நமக்கு வருகிறது. அழைக்கப்பட்டவர் களுடைய அழைப்பை ஏற்று அங்குசென்று சந்தோஷமாக அவர்களுடன் இருக்கிறோம். இதைப்போன்ற ஒரு அழைப்பைக்குறித்து நமது ஆண்டவர் இயேசு உவமையாக சொல்லுகிறதை நாம் மத்தேயு 22:1-14-ங்கு வசனங்களில் வாசிக்கிறோம். “பரலோகராஜ்யம் தன் குமாரனுக்குக் கலியாணஞ்செய்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது. அழைக்கப்பட்டவர்களைக் கலியாணத்திற்கு வரச்சொல்லும்படி அவன் தன் ஊழியக்காரரை அனுப்பினான்; அவர்களோ வர மனதில்லாதிருந்தார்கள். அப்பொழுது அவன் வேறு ஊழியக்காரரை அழைத்து: நீங்கள் போய், இதோ, என் விருந்தை ஆயத்தம்பண்ணினேன், என் எருதுகளும் கொழுத்த ஜெந்துக்களும் அடிக்கப்பட்டது, எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது; கலியாணத்திற்கு வாருங்கள் என்று அழைக்கப்பட்டவர்களுக்குச் சொல்லுங்களென்று அனுப்பினான். அழைக்கப்பட்டவர்களோ அதை அசட்டைபண்ணி, ஒருவன் தன் வயலுக்கும், ஒருவன் தன் வியாபாரத்துக்கும் போய்விட்டார்கள். மற்றவர்கள் அவன் ஊழியக்காரரைப் பிடித்து, அவமானப்படுத்தி, கொலைசெய்தார்கள். ராஜா அதைக் கேள்விப்பட்டு, கோபமடைந்து, தன் சேனைகளை அனுப்பி, அந்தக் கொலைபாதகரை அழித்து, அவர்கள் பட்டணத்தையும் சுட்டெரித்தான்” என்றார் (மத்.22:3-7).

இந்த உவமையில் அழைக்கப்பட்டவர்கள் ராஜாவின் அழைப்பை அசட்டை பண்ணினதை காண்கிறோம். ராஜா என்றால் அத்தேசத்து குடிமக்கள்

அவனுடைய ராஜ்யபாரத்தின் கீழ் இருந்திருப்பார்கள். ராஜ்யபாரம் முழுமையும் அவனுடைய ஆட்சிக்கு கட்டுப்பட்டதாக இருந்திருக்கும். அவனை எல்லோரும் மதித்து இருப்பார்கள். குறிப்பாக ராஜா அவனுக்கு மிகவும் நெருக்கமானவர்களுக்கே முதலாவது இந்த அழைப்பைக்கொடுத்திருப்பான் அல்லவா! ஆனால் அவர்களோ, வர மனதில்லாதிருந்தார்கள் என்று வாசிக்கிறோம். இன்றும் கூட நம்முடைய தேவனாகிய கர்த்தர் மாபெரும் அழைப்பை நம்மெல்லோருக்கும் கொடுத்திருக்கிறார். இந்த அழைப்பை முதலாவது தம் சொந்த ஜனமாகிய இஸ்ரவேலர் புறம்பாக்கினார்கள். அநேக தீர்க்கதரிசிகளைக்கொண்டு அழைத்தார். அவர்களோ அதை அந்நிய காரியமாக நினைத்தனர். அந்த உவமையில் சொல்லப்பட்டபடி வேறு ஊழிக்காரரை அனுப்பி நீங்கள் போய், இதோ, என் எருதுகளும் கொழுத்த ஜெந்துக்களும் அடிக்கப்பட்டது, எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது; கலியாணத்திற்கு வாருங்கள் என்று மீண்டும் அழைப்பு விடுத்தார். அவர்களோ அதை அசட்டைபண்ணி, ஒருவன் தன் வயலுக்கும், ஒருவன் தன் வியாபாரத்துக்கும் போய்விட்டார்கள். மற்றவர்கள் அவன் ஊழிக்காரரைப் பிடித்து, அவமானப்படுத்தி, கொலைசெய்தார்கள். தேவன் அனுப்பின அநேக தீர்க்கதரிசிகளை இவ்விதமாகவே செய்தார்கள். அவர்களுக்கோ தேவனுடைய உன்னத அழைப்பை ஏற்றுக்கொள்ள மனதில்லாது, அதை அசட்டைபண்ணி, தங்களுடைய சொந்த வேலைகளுக்கு முதலிடம் கொடுத்துச் சென்று விட்டனர்.

இன்றைக்கும் தேவனுடைய அழைப்பை உதாசினப்படுத்துகிற அநேகரை நாம் காண்கிறோம். தேவன் ஒவ்வொருவரையும் தம்முடைய பரிசுத்த ஸ்தலத்திற்கு அழைத்திருக்கிறார். பவுல் இது குறித்துசொல்லும்போது; "தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்" என்றார் (1தெச.4:7). இந்த அழைப்பு ஒரு உன்னத அழைப்பு என்றே சொல்லவேண்டும். இந்த அழைப்பை அறிந்த ஒருவன் அல்லது அழைப்புக்குப் பாத்திரவான் அதை அசட்டை பண்ணுவானேயானால் அவனுடைய வாழ்வு என்னவாகும்? உவமையிலே நாம் வாசிக்கிறபடி தன் சேனையை அனுப்பி, அந்த கொலைபாதகரை அழித்து, அவர்கள் பட்டணத்தையும் சுட்டெரிப்பார் என காண்கிறோம். மேலும் அழைக்கப்பட்டவர்கள் அபாத்திரராய் போனபடியால் அந்த ராஜா என்ன செய்தான்? தன் ஊழியக்காரரை நோக்கி: "நீங்கள் வழிச்சந்திகளிலே போய், காணப்படுகிற யாவரையும் கலியாணத்திற்கு அழைத்துக்கொண்டு வாருங்கள் என்றான். அந்த ஊழிக்காரர் பறப்பட்டு, வழிகளிலே போய், தாங்கள் கண்ட நல்லார் பொல்லார் யாவரையும் கூட்டிக்கொண்டு வந்தார்கள்; கலியாணசாலை விருந்தாளிகளால் நிறைந்தது. விருந்தாளிகளைப் பார்க்கும்படி ராஜா உள்ளே பிரவேசித்தபோது, **கலியாண வஸ்திரம்** தரித்திராத ஒரு மனுஷனை அங்கே கண்டு: சிநேகிதனே, நீ கலியாண வஸ்திரமில்லாதவனாய் இங்கே எப்படி வந்தாய் என்று கேட்டான்; அதற்கு அவன் பேசாமலிருந்தான். அப்பொழுது, ராஜா பணிவிடைக்காரரை நோக்கி: இவனைக்

கையுங்காலும் கட்டிக் கொண்டுபோய், அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற புறம்பான இருளிலே போடுங்கள் என்றான்" (மத்.22:9-13).

தாம் நேசித்த ஜனங்கள் தேவனுடைய அழைப்பை உதாசினப்படுத்தினபடியால் பிதாவாகிய தேவன் யாவருக்கும் அழைப்பை விடுத்தார். இந்த அழைப்பு உங்களுக்கும் எனக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் இந்தப் புதுவருடத்தில் **அழைப்பின் வஸ்திரம்** தரித்தவர்களாக இருக்கிறீர்களா? பவுல் அநேக நிருபங்களில் எழுதும்போது "...பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர் களுமாகிய அனைவருக்கும் எழுதுகிறதாவது" என எழுதுகிறார் (ரோ.1:2). தேவன் பரிசுத்தத்திற்கு அழைத்திருக்கிறார். தம்முடைய குமாரன் மூலமாக நம்மை பரிசுத்தப்படுத்துகிறார். ஆக தேவனுடைய அழைப்பு பரிசுத்த அழைப்பு. ஆகையால் ஒவ்வொருவரும் பரிசுத்த வஸ்திரம் தரித்தவர்களாக இருக்கவேண்டும். பரிசுத்த வஸ்திரம் என்று சொல்லும்போது வெண்மையான ஆடைகளை மட்டும்போட்டுவிட்டால் போதாது. உள்ளம் தூய்மையாக இருக்க அவருடைய வசனத்தினால் நாம் கழுவப்பட்டவர்களாகவும், கிறிஸ்து இயேசுவை நாம் நம்முடைய சரீரத்தில் தரித்தவர்களாகவும் காணப்படவேண்டும். வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தில் லவோதிக்கேயா சபைக்கு எழுதும்போது "நீ உடுத்திக்கொள்வதற்கு வெண்வஸ்திரங்களை என்னிடத்திலே வாங்கிக் கொள்ளவும்" என்று எழுதுகிறார். ஆதாமுடைய நிர்வாணத்தை மறைக்க தோல் உடைகளை உண்டாக்கிக் கொடுத்ததுபோல, பாவத்திலிருந்து மீட்கப்பட்டவர்கள் உடுத்திக்கொள்வதற்கு வெண்வஸ்திரங்களை கொடுக்கிறார். இவ்வஸ்திரத்தைப் பெற்றுக்கொண்டு கர்த்தருக்குள் வளருங்கள்.

புதிதாக அழைக்கப்பட்ட விருந்தாளிகளைப் பார்க்கும்படி ராஜா உள்ளே பிரவேசித்தபோது, கலியாண வஸ்திரம் தரித்திராத ஒரு மனுஷனை அங்கே கண்டு, சிநேகிதனே, நீ கலியாண வஸ்திரமில்லாதவனாய் இங்கே எப்படி வந்தாய் என்று கேட்டான்; அல்லவா? அதற்கு அவன் என்ன மறு உத்தரவு கொடுத்தான். குற்றம் செய்கிறவர்கள் பேசாமலிருப்பதுபோல அவன் பேசாதிருந்தான். ஒருவேளை அவர் நம்மை மன்னித்துவிடுவார் என்று அவன் நினைத்திருக்கக்கூடும். ஆனால் அங்கே அவ்விதமாக நடக்கவில்லை. ராஜா பணிவிடைக்காரரை நோக்கி; இவனைக் கையுங்காலும் கட்டிக் கொண்டுபோய், அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற புறம்பான இருளிலே போடுங்கள் என்றான். ஆம் அன்பானவர்களே, அழைக்கப்பட்ட அழைப்புக்கு பாத்திரவான்களாக இல்லாத வேளையில் இவனுக்கு வந்த அதே தண்டனைதான் உதாசினப்படுத்துகிறவர்களுக்கும் கிடைக்கும். கர்த்தர் நம்மை மன்னிப்பார் என்று சோம்பலாக இருந்துவிடாதீர்கள். அநேகருடைய எண்ணம் இதுவாகத்தானிருக்கிறது. அப்பொழுது பார்த்துக்கொள்வோம் என்று மெத்தனமாக இருந்து விடுகின்றனர். ராஜாதி ராஜாவாகிய இயேசுகிறிஸ்து இனி நியாயாதிபதியாக வரப்போகிறார். முன்னே அவர் பாவிகளை இரட்சிக்கும்படியாக

மனிதகுமாரனாக பிறந்தார். இரண்டாம்முறை தம்மால் தெரிந்துகொண்டவர்களை பிதாவாகிய தேவனிடத்தில் சேர்க்கும்படியாகவும், கீழ்ப்படியாதவர்களை நித்தியமான அக்கினியில் தள்ளிப்போடும்படியாகவும் வருகிறார்.

ஆகையால் அன்பான சகோதரனே, சகோதரியே உங்களுடைய அழைப்பை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். "தேவன் அவனவனுக்குப் பகிர்ந்ததெப்படியோ, கர்த்தர் அவனவனை அழைத்ததெப்படியோ, அப்படியே அவனவன் நடக்கக்கடவன். எல்லாச் சபைகளிலேயும் இப்படியே திட்டம்பண்ணுகிறேன்" என்றார் பவுல் (1கொ.7:17). உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவராயிருக்கிறார். அவருடைய அழைப்பு மாறாதவைகள். நாம் அவருடைய அழைப்பை மறந்துவிடாது நாம் எந்நிலைமையிலிருந்து அழைக்கப்பட்டோம் என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும். சிலர் தாங்கள் வந்த சூழ்நிலையை மறந்துவிடுகின்றனர். மோசே தன் மாமன் எத்திரோவின் ஆடுகளை மேய்த்து வருகின்ற நாட்களில் அழைக்கப்பட்டான். அவனை கர்த்தர் தம்முடைய ஊழியத்திற்காக அழைத்து ஆறு லட்சம் ஜனங்களுக்கு மேற்பட்டவர்களை அவனைக் கொண்டு வழிநடத்தினார். மந்தை மேய்த்துக்கொண்டும், காட்டத்திப் பழங்களைப் பொறுக்கிக் கொண்டும் வந்த ஆமோஸை அழைத்து என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் சொல்லு என்றார். இவர்கள் தாங்கள் அழைக்கப்பட்ட சூழ்நிலையை மறந்துவிடவில்லை. அதை நினைத்து எழுதியும் வைத்துள்ளனர். ஆக ஒவ்வொருவனும் தான் அழைக்கப்பட்ட அழைப்பை நினைத்துப்பார்க்கவேண்டும். கர்த்தர் எல்லோரையும் பரிசுத்தத்திற்கு அதாவது நிலையான ராஜ்யத்திற்கு அழைத்திருக்கிறார். எல்லோரும் தீர்க்கதரிசிகள் அல்ல, எல்லோரும் அப்போஸ்தலர்கள் அல்ல அவனவனுக்கு தேவனால் கொடுக்கப்பட்ட வரத்தின்படி நடக்கக்கடவன் என்ற வசனத்தின்படி அழைக்கப்பட்ட அழைப்பில் உறுதியாக இருந்துசெயல்படவேண்டும். மோசே எங்கும் தேவனுடைய வீட்டில் உண்மையுள்ளவனாயிருந்தான். அதைபோல நாம் ஒவ்வொருவரும் உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

"சகோதரரே, நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள், இந்தச் சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாமல், அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள்" (கலா.5:13). கர்த்தருக்குள் அழைக்கப்பட்ட ஒருவன் சுயதீனனாயிருக்கிறான். அவன் மாம்சமானவனுக்கு அடிமையானவன் அல்ல. மாம்சமானவன் அப்படிப்பட்டவனை அடிமைகொள்ளக் கூடாது. ஆனால் அநேகர் அப்படிப்பட்டவர்களை அடிமைகொள்ளுகிறார்கள். அது கர்த்தருக்கு விரோதமான காரியம். எப்படியென்றால், பாவத்திலிருந்து மீட்கப்பட்டவன் கர்த்தருக்கு அடிமையாயிருக்கிறான். உலகத்தில் சுயாதீனனாயிருக்கிறான். ஆகையால் அவன் அன்பிற்கு கட்டுப்பட்டவனாகையால் அன்பினாலே ஊழியம்செய்யுங்கள் என்று பவுல் இங்கு குறிப்பிடுகிறார். அன்பு

இருக்கும் இடத்தில் அடிமையில்லை. அங்கு சுயாதீனம் நிலைத்திருக்கும். பிரியமானவர்களே, நீங்கள் கர்த்தரால் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள்; மனுஷருக்கு அடிமைகளாகாதிருங்கள். கர்த்தருக்குப் பயந்து அவருக்கு ஊழியஞ்செய்யுங்கள். நீங்கள் அழைக்கப்பட்ட நிலைமையிலே தேவனுக்கு முன்பாக நிலைத்திருங்கள்.

இறுதியாக ஆண்டவர் சொன்ன உவமையில் "அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர்" (மத்.22:14). For many are called, but few are chosen. நீங்கள் தேவனால் அழைக்கப்பட்டவர்களில் ஒருவராக இருக்கலாம். அதேவேளையில் நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப் பட்டவர்களில் ஒருவராக இருக்கவேண்டுமென்பதுவே எங்களது ஜெபமாகும். பேதுரு தமது நிருபத்தில் எழுதும்போது "பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின் படியே, ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே, கீழ்ப்படிதலுக்கும் இயேசுகிறிஸ்துவினுடைய இரத்தந்தெளிக்கப்படுதலுக்கும் தெரிந்துகொள்ளப்பட்ட பரதேசிகளுக்கு எழுதுகிறதாவது: கிருபையும் சமாதானமும் உங்களுக்குப் பெருகக்கடவது" என்று எழுதுகிறார் (1பேது.1:2). அழைக்கப்பட்டவர்கள் அநேகர் இருந்தார்கள் ஆனால் அவர்கள் அழைப்பை உதாசினப்படுத்தினர். தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைவார்கள். பிதாவாகிய தேவன் அவர்களுடைய தேவனாயிருந்து அவர்களை வழிநடத்துவார். "இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள்; சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார். இவர்கள் இனி பசியடைவதுமில்லை, இனி தாகமடைவதுமில்லை; வெயிலாவது உஷ்ணமாவது இவர்கள்மேல் படுவதுமில்லை. சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியானவரே இவர்களை மேய்த்து, இவர்களை ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார்; தேவன் தாமே இவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார்" என காண்கிறோம் (வெளி.7:15-17).

இச்செய்தியை வாசிக்கிற அன்பு சகோதரனே, சகோதரியே உங்களை அழைத்தவர் உண்மையுள்ளவர் என்பதை மறந்துபோகாதிருங்கள். உலக அழைப்பு உலகத்தோடு முடிந்துவிடும். ஆனால் உன்னதமானவருடைய அழைப்பு நம்மை உன்னதத்திற்கு கொண்டுசெல்லும். இந்த அழைப்பை விட்டுவிடாதிருங்கள். "தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது" (2பேது.1:3,4). அவைகளை கருத்தாக கவனியுங்கள். உங்களை அழைத்த கர்த்தரை அறிகிற அறிவில் வளருங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

# நாங்கள் தவறிழைத்து விட்டோம் என நான் அனுமானிக்கிறேன்

## I Guess We Were Wrong

*-J.C.Choate*



ஒரு சில ஆண்டுகளுக்கு முன் கொரியாவில் ஒரு மத அமைப்பு கிறிஸ்து ஒரு குறிப்பிட்ட தேதியில் மீண்டும் பூமிக்கு வரப்போகிறார் என பிரசங்கிக்கத் தொடங்கியது. இந்தக் குழு புதுதில்லியில் ஒரு அலுவலகத்தைக் கொண்டிருந்தது. இதைப்போல் உலகம் முழுவதிலுமுள்ள மற்ற நகரங்களிலும் அலுவலகத்தைக் கொண்டிருந்தது. இவர்களுடைய முக்கிய வேலை கர்த்தருடைய வருகையின் நாளை மக்களுக்கு இலக்கிய அறிவிப்பின் மூலம் சொல்வதை அணைத்துப்போடுவதேயாகும். புதுதில்லியிலுள்ள ஒரு சுவிசேஷ பிரசங்கியாராகிய சன்னிடேவிட் அவர்களோடு பேசும்படிக்கு அவர்களுடைய உள்ளூர் அலுவலகத்திற்குச் சென்றார். ஆனால் அங்கே அந்த மக்களிடமிருந்து அதிகமான விஷயங்களைப் பெறுவது இவருக்குக் கடினமாகக் காணப்பட்டது. அவர் ஒருநாள் அல்லது கிறிஸ்துவின் வருகைக்காக முன்னேற்பாடு செய்திருந்த அந்த நாளுக்கு முன் இரண்டாவது முறை அவர்களை போய்ப்பார்க்கச் சென்றார், ஆனால் அவர்களது அந்த அலுவலகம் காலிசெய்யப்பட்டு பூட்டியிருக்கக் கண்டார். அந்த பகுதியில் சிலர், கொரியர்கள் கிறிஸ்து திரும்ப வரும்போது தாங்கள் தங்களுடைய நாட்டில் இருக்க விருப்பம் கொண்டவர்களா தங்களுடைய தேசத்திற்கு சென்று விட்டார்கள் என அவரிடம் கூறினார்கள். உண்மையாக அவர்கள் கிறிஸ்துவின் வருகைக்காக முன்னேற்பாடு செய்திருந்த அந்த நாளில் கர்த்தர் வரவில்லை. இந்நாளிலும் அவர் வரவில்லை. ஆனால் அதன் பிறகு காவலர் கொரியாவில் அந்த தலைவனின் வீட்டிற்கு அவனை கைது செய்யும்படி சென்றார், அவனுடைய வியாக்கியானம், "**நல்லது, நாங்கள் தவறிழைத்து விட்டோம் என நான் அனுமானிக்கிறேன்**" எனக் கூறியதாக செய்தித் தாளில் வாசித்தோம்.

ஆனால் கொரியாவிலுள்ள காவலர் ஏன் இந்த மனிதனை கைது செய்தார்? ஏனென்றால் அவன் கர்த்தருடைய வருகைக்கு நாளைக் குறித்து மேலும் பலர் தங்களுடைய பணம், சொத்து இன்னும் பலவற்றை, கர்த்தருடைய வருகைக்குப் பின் அவர்களுக்குத் தேவைப்படாது என்பதனால் அவைகளை அந்த

மனிதனுக்கு கொடுத்தவர்களிடமிருந்து பெரும் செல்வத்தை திரட்டிக் கொண்டான். ஆனால் கேள்வி என்னவென்றால், அந்த ஜனங்களோடு அவனுக்கு என்ன அவசியம் இருந்திருக்கும்? ஏன் அந்த ஜனங்கள் அந்த சொத்துக்கள் அனைத்தையும் அவனுக்குக் கொடுக்கும்படிக்கு மிக முட்டாளாக இருந்திருக்கிறார்கள்? என்ன நடந்து கொண்டிருந்தது என்பதை உணரும்படிக்கு அவர்கள் ஞானமுள்ளவர்களாய் இருந்திருப்பார்கள் என நீங்கள் நினைப்பீர்கள்.

நாம் இது மாதிரி கதைகளை பல முறை கேள்விப்பட்டிருக்கிறோம். பல வருடங்களுக்கு முன் கொழும்பு மற்றும் ஸ்ரீலங்காவிலுள்ள யெகோவா சாட்சி பிரசங்கியாருடன் பேசி, அவன் அந்த வருடத்திற்கான தன்னுடைய குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பாமல் அவனுடைய வரிகளை செலுத்தாமலுமிருந்தான் என அறிந்து கொண்டேன். இயேசு இவ்வாண்டுக்குள் வருகின்றார், ஆனபடியினால் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பவேண்டிய அவசியமில்லை. தன்னுடைய வரிகளை செலுத்த வேண்டிய அவசியமுமில்லை, உலகிலுள்ள ஒவ்வொன்றும் முடிவுக்கு வரப்போகிறது என்ற காரணம் கூறப்பட்டது. அந்த மனிதனுடைய மற்றும் அவனை போலுள்ள மற்றவர்களின் முட்டாள்தனம் எப்பேர்பட்டது! அவன் கர்த்தருடைய வருகைக்கான நாளை குறிப்பிட்டிருந்த அந்நாளில் கர்த்தர் வராத பின்பு அவன் என்ன செய்தான் என்பது குறித்து நான் ஆச்சரியப்பட்டேன்! நிச்சயம், அவனுடைய குழந்தைகள் அவ்வாண்டு பள்ளிக் கல்வியை இழந்தார்கள். அவன் தன்னுடைய வரிகளைக் கட்ட வேண்டியவனானான்.

இவை கர்த்தர் மறுபடியும் வரமாட்டார் என்று சொல்லுவதாக அர்த்தமில்லை. ஏனென்றால் கர்த்தர் தம்முடைய வசனத்தில் தாம் ஒரு நாள் மறுபடியும் வருவார் எனக் கூறியிருக்கிறார். ஒரு விஷயம் என்னவென்றால், அவருடைய வருகைக்கான நாளைக் குறிப்பது மனிதனுக்கு மதிகெட்ட செயலாகும். இருந்தபோதிலும் கிறிஸ்து தாமே மறுபடியும் வருவேன் என வாக்களித்திருக்கிறார் (யோவா.14:1-4). தம்முடைய வருகையின் நாழிகையை குறித்து, அவர், **"அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்"** என்றார் (மத்.24:32). கிறிஸ்து என்ன சொன்னார் எனக் கவனித்தீர்களா? அந்த நாளை அவர்கூட அறியவில்லை, தூதர்களும் அறியார்கள். ஆனால் பரலோகத்திலுள்ள பிதா ஒருவரே அறிவார் என்று சொன்னார். இப்போது கர்த்தருடைய கூற்று உண்மையாயிருக்குமானால், எந்த ஒரு மனிதனும் இதை அறிவதெப்படி? மேலும் எந்த ஒரு மனிதனும் அவருடைய வருகையின் நாளை குறிப்பிடும் படிக்கு மதியீனனாய் இருப்பது எப்படி? நீங்கள் இதை சிவப்பு மையினால் குறித்து வைத்துக்கொள்ளுங்கள்: யாராவது ஒருவர் கிறிஸ்து மறுபடியும் வரும் நாளை அறிவிக்கிறபோது, அவன் தானே, தான் ஒரு மோசம் போக்குகிறவன் என அறிவித்து கொண்டிருக்கிறான். மேலும் அவனுடைய நோக்கம் வஞ்சிக்கிறதும், வேதாகமத்தைக் கற்றறியாது அவனுக்கு செவி சாய்க்க விரும்புகின்ற மக்களை ஏமாற்றுவதுமே ஆகும்.

மனிதர்கள், தாங்கள் கர்த்தருடைய வருகைக்கான நாளை நோக்கி முன்னேற வேண்டும் என்ற எண்ணத்துடன் பல வருடங்களாகவே கவனத்தை ஈர்க்கின்றவர்களாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர். சில காரணங்களுக்காக அவர்கள் கர்த்தர் அந்த அறிவிப்பினை வேதாகமத்தில் கண்டுபிடிக்கும்படி பிரசங்கம் மற்றும் எண்களின் வடிவத்தில் வெளிப்படுத்தியிருக்கிறார் என நினைக்கிறார்கள். இது தேவன் மனிதனோடு ஒரு விளையாட்டு விளையாடிக் கொண்டிருப்பதுபோல, அதாவது அவர் அந்த நாளை வேதத்தில் எங்கோ மறைத்து வைத்திருக்கிறார் என்பது போலவும், மனிதனிடத்தில் இதை ஊகித்துப்பார்க்க, நன்றாக யோசித்துப் பார்க்க விட்டு விட்டது போலவும், அதை வெளிப்படுத்த இசைவாயுள்ளதை படம் பிடித்துக் காட்ட முயற்சிக்கிறது போலவும் இருக்கிறது. ஆனால் அது மிகவும் மதியீனமான ஒன்று. இயேசு தாமே தம்முடைய வருகையை அறிந்திருந்தால் ஏன் பிதா ஒருவரே அந்த நாழிகையை அறிவார் எனக் கூற விரும்புவார். மேலும் சிலர் சாமர்த்தியமான மனிதர் அதை விடுவிக்கும்படிக்கு அந்த நாளை வேதாகமத்தில் ஏதோவொரு இடத்தில் எழுதி வைத்திருப்பாரே!

தேவன் மறுபடியும் இயேசு எப்போது வருவார் என்பதை நாம் அறிந்து கொள்ள விரும்பியிந்தால், நமக்கு வெளிப்படையாகவும், தெளிவாகவும் சொல்லியிருக்க மாட்டாரா?

பேதுரு, "கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம்; பூதங்கள் வெந்து உருகிப்போம்; பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்" (2பேது.3;10) என எச்சரிக்கிறார்.

பின்பு பவுல், கிறிஸ்துவை விசுவாசியாதவர்களுக்கும் கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் ஆக்கினையை செலுத்தும்படிக்கு கர்த்தர் வருகின்றார் எனக் கூறுகிறார் (2தெச.1:7-9). இப்பாடங்களிலிருந்து அறிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் இன்றோ, நாளையோ, அடுத்த வருடமோ, இன்றிலிருந்து ஒரு நூறு ஆண்டுகளோ, ஓராயிரம் ஆண்டுகள் கழித்தோ அல்லது எப்பொழுதோ அவரை சந்திக்க நாம் ஆயத்தமுடையவர்களாயிருக்கவேண்டும். கர்த்தருக்கு ஒருநாள் ஆயிரம் வருஷம்போலவும் ஆயிரம் வருஷம் ஒருநாள் போலவும் இருக்கிறதென்று அறியுங்கள் (2பேத.3:8).

நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்திருக்கிறீர்களா? (மாற்.16;16). அவருடைய வருகையில் அவரை சந்திக்க ஆயத்தமாயிருக்கிறீர்களா?

**"வேதத்தில் ஒரு எழுத்தின் உறுப்பு அவமாய்ப் போவதைப் பார்க்கிலும், வானமும் பூமியும் ஒழிந்துபோவது எளிதாயிருக்கும்" லூக்.16:17**

பெண்கள் பகுதி

# தேவன் எனக்குத் தேவையில்லை
# I Don't Need God

*-Betty*



நாம் வாழ்கின்ற இந்த சமயசார்பற்ற உலகில், "சமயம் தேவையற்றது. சமய வினாக்களைக் குறித்த ஆராய்ச்சியினால் என் மனதைச் சங்கடப்படுத்தமாட்டேன்" என தீர்மானம் எடுக்கின்ற ஜனங்கள் அநேகர்.

சமயம் என்பது பாரம்பரியங்களுக்கு அடிமைப்பட்டுள்ள ஜனங்களின் ஒருவழிமுறை, மதகுருவுக்குரிய அமைப்புகள், சமய சம்பந்தமான கஜானாக்களுக்குள் தசமபாகங்களை செலுத்துதல், மற்றும் சமய கட்டுக் கதைகளைக் காட்டிலும் அநேகமாக ஒன்றுமில்லாதிருக்கும் ஒரு பிற்கால வாழ்வுக்கான ஆயத்தம் என தவறான கருத்து இருக்கலாம். அவ்வகையான குற்றச்சாட்டுகள் உண்மையாக இருக்குமானால், பிறகு சமயம் என்பது தேவையற்ற ஒன்றுமட்டுமல்ல, ஆனால் ஜனங்கள் இவ்வித சங்கலிகளினால் கட்டப்பட்டிராமல் நலமுடனிருப்பார்கள்.

ஆம், மேலும், சமயக் கேள்விக்கு இரு பக்கங்கள் இருக்கின்றன; தேவன் தம்மை நேசிக்கும்படி மனிதனோடு ஒரு உறவினையும், மேலும் மனிதருடைய நன்மைக்காக அவருடைய வழிநடத்துதலையும், அந்த உறவு அவர் உலகத்திற்கு கொடுத்த சமயப் புத்தகத்தோடு கட்டப்பட்டிருப்பதற்கென்றும் திட்டமிட்டார். எப்படியோ சாத்தானும் கூட வழிநடத்துதலுக்கென்ற மனிதனுடைய தேவையை உணருகிறான். எனவே தேவனை அறிந்து கொள்ளாதபடிக்கும், ஜனங்களை குழப்பும்படிக்கும் அவன் போலியான உருவங்களை உண்டாக்கியிருக்கிறான்.

இன்று ஜனங்கள் உலகிலுள்ள வேறுபட்ட மதங்களை - கிறிஸ்தவம், யூத சமயம், இந்து சமயம், பௌத்த சமயம், இஸ்லாமிய சமயம், டாவோயிஸம், ஜோராஸ்டோரியனிசம், கத்தோலிக்க சமயம், பிராட்டஸ்டண்டு சமயம் - போன்றவற்றைக் காண்கையில் எதைப் பின்பற்றுவது என தெரிந்து கொள்ளுதலானது முழுவதும் நசுக்கப்படுகின்றது. ஒவ்வொரு சமயமும் வித்தியாசமான தெய்வத்தையும் வித்தியாசமான நீதிநெறிகளையும், வித்தியாசமான ஆராதனை முறைமைகளையும், ஒருவனுடைய பாவத்திற்கான பிராயச்சித்தத்திற்கு வித்தியாசமான வழியையும் காட்டுகிறது. ஒரு மனிதன் எந்த மார்க்கம் உண்மையாகவே தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறது என்றும் எது சத்தியத்தை மறைக்கும்படிக்கு சாத்தானால் போலியாக உண்டாக்கப்பட்டது என்றும் எவ்வாறு அறியக்கூடும்?

அலட்சியமான அல்லது குழப்பமான ஒரு மனோநிலையில், அநேக ஜனங்கள் தேவன் தங்களுக்குத் தேவையில்லை என தீர்மானிக்கின்றனர். அவர்கள் ஒரு சமய சார்பற்ற உலகில் சமயசார்பற்ற வாழ்க்கை வாழ்வோம் சமயத்தை மறப்போம் என தீர்மானம் செய்கின்றனர்.

இது சரியான தெரிந்தெடுத்தலா? தேவனற்ற ஒரு சமுதாயமும் தேவனற்ற ஒரு வாழ்க்கையும் தேவ ஞானத்தினால் வடிவமைக்கப்பட்டிருப்பதைக் காட்டிலும் சிறப்பானதாயிருக்கிறதா? நாத்திகத்தின் முயற்சிகளையும், நம்பிக்கைகளையும் பார்ப்பதின் மூலம், முழு உலகத்தாலும் இது பின்பற்றப்படுமானால் இந்த மிதமிஞ்சிய தெரிந்து கொள்ளுதல் எதைக் கொண்டு வரும் என்பதை நாம் கண்டு கொள்ளலாம். நாத்திகம் என்பது தேவனற்ற கட்டுப்பாடுகளற்ற ஒரு சமய அமைப்பாகும். இது மனிதாபிமானத்தைத் தவிர வேறொன்றும் பெரியதல்ல வென்றும், வாழ்க்கை ஒழுங்குக்கடுத்த அனைத்தையும் தீர்மானிக்க மனிதாபிமானத்திற்கு உரிமையுண்டு என்றும் கூறுகிறது.

நாத்திகத்தின் இலக்கு என்ன? அவர்களுடைய அறிக்கையின்படி, உண்மையான "சரி" மற்றும் "தவறு" என்பதில்லை. சத்தியத்தில் "பூரணமானவைகள்" இல்லை, நீதி, கண்ணியம், மனிதரிடையேயான ஐக்கியங்கள், அல்லது ஒரு வீட்டை மற்றும் திருமணத்தை எது நியமிக்கிறது என்பவைகள் சம்பந்தமான விதிமுறைகள் இல்லை. நாத்திகர்கள் பொய்யையும், ஏமாற்றுதலையும் ஆதரிப்பார்கள் இச்செயல்கள் ஒருவனுடைய தனிப்பட்ட "லாபம்" ஆக இருக்குமானால்; அவர்கள் கருச்சிதைவு செய்வதை (சிசுக் கொலை) வெளிப்படையாக ஆதரிக்கிறார்கள். மேலும் வேதனையின்றி இறக்க செய்தல் (முதியோரை, வியாதியஸ்தரை அல்லது மனதில் அல்லது சரீரத்தில் ஊனமுள்ளவரை கொலை செய்தல்) சுயபுணர்ச்சி கொள்ளுதல் (பால் உறவு, ஆண்கள் ஆண்களோடு அல்லது பெண்கள் பெண்களோடு) திருமண உறவு வைத்துக் கொள்ளத் தகாதவரோடு பாலுறவு கொள்ளுதல், (நெருங்கிய அண்ணன், தங்கை, அக்கா, தம்பி போன்ற குடும்ப அங்கத்தினர்களோடு பாலுறவு கொள்ளுதல்) அல்லது சிறுகுழந்தைகளோடு பாலுறவு கொள்ளுதல் (சிறு குழந்தைகளைப் பலாத்காரம் பண்ணுதல்) போன்ற இப்படிப்பட்ட நடக்கையை ஒருவன் தெரிவு செய்கிறவனானால், உறவு அல்லது விவாகரத்து அல்லது சுயபுணர்ச்சி "திருமணங்களில்" நிலைத்திருக்கிறான். சுருக்கமாக கூறினால், அவர்கள் இப்படிப்பட்ட காரியத்தை பாவமாக கருதுவதில்லை. மேலும் ஏதேனும் ஒரு நடக்கை அனுமதிக்கப்படக் கூடியதாயிருக்கிறது.

உண்மையாகவே, நீதிமொழிகள் 14:12-ல் கூறியுள்ளதுபோல்: "மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்" இந்த பழக்கப்பட்ட "உரிமைகளுக்கு" இலக்கான யாரேனும் ஒருவர் அவைகள் எவ்வளவு கேவலமான தீமை நிறைந்ததும் தவறானதும் என அறிகின்றனர். முழு உலகமும் இவைகளைக் கட்டுப்படுத்தாமல் பயிற்சிக்குமானால், துன்மார்க்கமும் அழிவுமான சேற்றிலே நாம் வாழுவோம்.

"மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்" (எரே.10:23). தங்களுடைய வாழ்நாளெல்லாம் தேவனுடைய ஆளுகையில்லாமல் வாழ விரும்புகிறவர்களின் துணிச்சலான கூற்றுக்கு எதிரிடையான, உண்மையானது, "அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு சிக்குண்டு சோதிக்கப்படுகிறான், பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது மரணத்தைப் பிறப்பிக்கும்" என்பதாகும் (யாக்.1:14,15).

ஆனபடியினால், தேவனுடைய வார்த்தையில் அவருடைய வழிநடத்துதல்கள், ஆத்துமாவின் நித்திய ஆயத்தத்திற்காக மட்டுமல்ல, ஆனால் நம்முடைய பாதுகாப்பிற்கும், இவ்வுலகில் வாழ்கின்ற நாம் நலமுடன் வாழ்வதற்கும் அவைகள் தேவையாயிருக்கின்றன. தேவன் நமக்கு தேவை. நம்முடைய வாழ்வினை வடிவமைப்பதில் அவருடைய ஞானமும் வழிநடத்துதலும் நமக்குத் தேவை. நாம் புதிய ஏற்பாட்டினை ஆழமாக ஆராய்வோமானால் நம்முடைய முடிவான நன்மைக்காக தேவன் நம்மிடம் எதுவும் கேட்கிறவரல்ல என உணர்ந்து கொள்ளுவோம் மேலும் அவர் நமக்கு இறுதியான தீமை எதுவோ அதை மட்டும் தடுக்கிறார். ஏனென்றால் அவர் தம்முடைய சிருஷ்டியை நேசிக்கிறார். ஒரு தகப்பன் தன் குழந்தைகளுக்கு உதவுகிறது போல அவர் நம்மை வழிநடத்தவும், பாதுகாக்கவும் நம்மேல் வாஞ்சையாயிருக்கிறார்.

தேவன் உனக்குத் தேவையில்லை என தவறான தீர்மானத்தை வகுத்திருக்கிறாயா? அப்படியென்றால், இந்த சரீரபிரகாரமான வாழ்விலும் கூட உனக்காக சேர்த்து வைக்கப்பட்டுள்ள தவிர்க்க முடியாத பிரச்சனைகளோடும் மனவேதனைகளோடும் நித்திய அழிவுக்குச் செல்லும் சாலையில் நீ பயணம் செய்து கொண்டிருக்கிறாய். திரும்பிச் செல், இந்த கேள்வியை மறு -ஆய்வு செய். உன்னுடைய அனுதின வாழ்வில் தேவன் உன்னுடைய தகப்பனாகவும், வழிகாட்டியாகவும் இருக்கும்படிக்கு அவரை அனுமதிக்க தீர்மானம் செய்.

## பொது அறிவுக் களஞ்சியம்


### முதன்மைகள்

- ☆ முதன் முதலில் செயற்கை கோள் அனுப்பிய நாடு - ருஷ்யா
- ☆ முதன் முதலில் இந்தியாவில் செய்தித்தாளை தோற்றுவித்தவர் - ஜேம்ஸ்கிக்கி
- ☆ முதன் முதலில் எவரெஸ்ட் சிகரத்தை அடைந்தவர் - டென்சிங்
- ☆ முதன் முதலில் சீஷர்களுக்குக் கிறிஸ்துவர்கள் என்ற பெயர் வழங்கப்பட்ட இடம் - அந்தியோகியா
- ☆ முதன் முதலில் கிறிஸ்துவின் சபை துவங்கப்பட்ட இடம் - எருசலேம்

# அலங்காரம்

## THE ORNAMENT

-*Glory Arjunan*



ஸ்திரீகள் தங்களை அலங்கரித்துக் கொள்வதில் அதிக நாட்டமுடையவர்கள் என்பது ஒத்துக் கொள்ளக்கூடிய ஒன்றுதான். இன்றைய உலகில் பெண்கள் தங்களை பலவிதங்களில் அலங்கரித்துக்கொள்கின்றனர். நவநாகரீக உடைகளினாலும், ஆபரணங்களினாலும், அலங்கரிப்பதோடு Beauty Parlour க்கும் சென்று தங்கள் முகம், தலை, நகங்கள் போன்றவற்றை அழகுபடுத்துவதிலும் மிகவும் ஆர்வமுடையவர்களாகக் காணப்படுகின்றனர். சாதாரணமாக ஒரு பெண் தன்னை அலங்கரித்துக் கொள்வது தவறில்லை. இதைத் தவறு என்று சொன்னாலும் உலகம் ஒத்துக்கொள்ளாது. ஆனால் கிறிஸ்தவ ஸ்திரீகளாகிய நமக்கு இவ்வகையான அலங்கரிப்பு அவசியமா? அல்லது இவ்வகையான அலங்கரிப்பு தகுதியானதா? என்பதைப் பற்றி வேதாகமத்தின் துணை கொண்டு ஆராய்வோம்.

அன்பு சகோதரியே, "உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்" (1கொ.6:19,20) என்று வேதம் கூறுகிறது. இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் பாவமற கழுவப்பட்ட ஒவ்வொருவரும் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டவர்கள் அதாவது இயேசு நம்மை தமது இரத்தத்தைக் கொடுத்து தேவனுக்கென்று விலைக்கு வாங்கியிருக்கிறார். ஆனபடியினால் நம்முடைய சரீரமும், ஆவியும் நமக்கல்ல அவருக்குச் சொந்தமானதாக மாறிவிட்டது. அப்படியிருக்க நம்முடைய சரீரத்தையும், ஆவியையும் அவருக்குப்பிரியமானபடி அலங்கரிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. ஆவிக்குரிய கிறிஸ்தவர்கள் எனத் தங்களை அழைத்துக் கொள்பவர்கள், தாங்கள் ஆவியில் நிறைந்து ஜெபிப்பதாகவும் தேவனை மகிமைப்படுத்துவதாகவும் கூறுவர், ஆனால் தங்களுடைய சரீரத்தை தேவனுக்கேற்ற விதத்தில் அலங்கரிக்க வேண்டுமென்பதை மறந்துவிடுகின்றனர்.

நம்முடைய இருதயம் மகா திருக்குள்ளதும், மகா கேடுள்ளதுமாயிருக்கிறது என வேதம் கூறுகிறது. இருதயத்தில் பலவிதமான ஆசை இச்சைகள் புறப்படலாம். உலகத்தின் ஆசைகளும், இச்சைகளும், கண்களின் இச்சையும், மாம்சத்தின் இச்சையும் ஒழிந்துபோம் (1யோவா.2:16,17). ஆனால் நம்முடைய இருதயத்தில் தங்கியிருக்க வேண்டிய குணம் சாந்தமும் அமைதியுமாம். அதுவே உங்களுக்கு அலங்காரமாயிருக்கும். ஆம், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக் கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றது" (1பேது.3:4) என்று பேதுரு கூறுகிறார். இது வாசிப்பதற்கு

ஏற்றது. ஆனால் நடைமுறைக்கு ஒத்துவராது. ஓரளவுக்காவது நம்மை உலகத்திற்கேற்றார் போல் அலங்கரித்துக் கொள்ளாவிட்டால் உலகம் நம்மை மதிக்காது என்று சாக்கு போக்கு சொல்லலாம். எது எப்படியிருப்பினும் தேவனுடைய பார்வையில் எது விலையேறப் பெற்றதோ அதுவே நமக்கு அலங்காரம். நம்மை அழகுபடுத்தக் கூடிய இந்த சாந்த குணத்தையும், அமைதியான குணத்தையும் ஆவியானவர் அழிந்து போகாத அலங்கரிப்பு என்று கூறுகிறார். ஒருவேளை இந்த இரண்டு ஆபரணங்களினாலும் நம்மை அலங்கரித்துக் கொள்வது என்பது மிகக்கடினமாகக் காணப்படலாம். இந்த அருமையான குணங்களினால் நம்மை அலங்கரித்துக் கொள்ள முயற்சிக்கும் போது பலவிதமான அவமானங்களும் பரிகாசங்களும் நமக்குத் தடைகளாக உருவெடுக்கலாம். நாம் சாந்தத்தோடும், அமைதியோடும் நடந்து கொள்ளும்போது உறவினரின் மத்தியில், நமக்குப் பிரியமானவர்கள் மத்தியில், வேலைபார்க்கு மிடத்திலும் மிகவும் சிறுமையும், எளிமையும் அற்பமுமாகக் எண்ணப்படலாம், ஆனால் தேவனுடைய பார்வையில் நம்முடைய இந்த இரண்டு அலங்கரிப்பும் விலையேறப்பெற்றது என்பதை மறந்து விட வேண்டாம்.

சாந்தமும், அமைதலுள்ள ஆவியுமாகிய இந்த ஆபரணங்களை நாம் தரித்துக் கொண்டோமானால் நம் இருதயத்திலிருந்து நல்ல பொக்கிஷங்கள் வெளிப்படும். "நல்ல மனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லதை எடுத்துக் காட்டுகிறான்" (லூக்.6:45). என்ற வசனத்திற்கேற்ப நல்ல கனிகளைக் கொடுப்போம். நல்ல கனிகளாகிய அன்பு, சந்தோஷம், சமாதானம் நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் போன்றவற்றை வெளிப்படுத்துவோம். அப்பொழுது கிரியையுள்ள கிறிஸ்தவர்களாக காணப்படுவோம். அநேகரை ஆதாயப்படுத்திக் கொள்வோம். சாந்தம் மற்றும் அமைதலுள்ள ஆவியாகிய இந்த ஆபரணங்களால் நம்மை அலங்கரிக்கும்போது புறம்பான அலங்கரிப்பை நம் மனம் அற்பமாக எண்ணத்துவங்கும். இவையிரண்டும் இருதயத்தில் நிறைந்திருக்கும் போது பொல்லாத குணங்களுக்கு இடமில்லாமல் போய்விடும். உலகத்திற்கு ஒத்த வேஷம் தரியாதிருங்கள் என வேதம் கூறுகிறது எனவே "தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்தபுத்தியினாலும் தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும் தங்களை அலங்கரிக்க வேண்டும்" (1தீமோ.2:10). புறஜாதிகளை நமக்கு மாதிரிகளாக கொள்ளக்கூடாது. புறஜாதிகளுடைய மார்க்கத்தைக் கற்றுக்கொள்ளக்கூடாது (எரே.10:2).

அன்பு சகோதரிகளே, இப்புத்தாண்டிலே புதிய தீர்மானம் எடுப்போம். புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டு சரீரத்தினாலும் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துவோம். தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்ற அலங்கரிப்பாயிருக்கிற ஆபரணங்களைத் தரித்துக்கொண்டு பரிசுத்த மணவாளனாகிய இயேசுவை சந்திக்க ஆயத்தமுள்ளவர்களாயிருப்போம். அநேகரை நம்முடைய நடக்கையினால் ஆதாயப்படுத்துவோம். தேவன் தாமே உதவி செய்வாராக.

# கிறிஸ்தவனின் உயிர்த்தெழுதல்



*Bro. Daniel Durairajan, Preacher*
*Church of Christ, A.K.J.Complex, 1st Floor,*
*Marshingpet Main Road, Trichy -1*
*Mobile No: 99446 16926*

தேவன் ஒருவரே சாவாமையுள்ளவர் (1தீமோ.6:16). சாவாமையுள்ள அவருடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட மனுஷனுக்கு சாவாமையை (நித்தியத்தை) கொடுப்பதில் பாரபட்சம் காட்டுவாரா?

இயேசு கூட சொன்னார்; "தேவன் 'மரித்தோருக்கு தேவனல்ல' அவர் ஜீவனுள்ளோருக்கு தேவன் (மத்.22:32). மேலும் அவர் சொல்லும்போது; என் மீது நம்பிக்கையை ஊறுதிப் படுத்துவாயானால் நீ மரிப்பதில்லை (யோவா.11:26).

நித்தியத்தைப் பற்றிய விளக்கம் உயிர் நூல் அழியாமையைப் பற்றி எப்படி கூறுகிறதென்றால், ஒரு உயிர் அதனுடைய குழந்தைகளில் வாழுகிறது இந்த கோட்பாட்டின் கருத்து என்னவாக இருந்தாலும் பரிசுத்த வேதாகமம் இதை வலியுறுத்துவது கிடையாது. சமுதாய அழியாமையைப் பற்றிய (Soualogy Immorality) ஒரு ஊகம் என்னவென்றால், ஒரு மனிதனுடைய செல்வாக்கு (Influence) அவன் மரித்து போனபின்பும் வாழ்ந்து கொண்டிருக்கிறது. மூன்றாவதாக, மறு பிறவி (Born again in the Body) இந்த கூற்றும் பரிசுத்த வேதாகமத்தோடு ஒத்து போவதில்லை. காரணம் மாமிசமும் ரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை (1கொரி.15:50).

அழியாததும் முடிவில்லாததுமான ஒரு ஜீவன் மாம்சத்திலிருந்து அல்லது மாற்றப்பட்ட சரீரத்திலிருந்து கொண்டே அந்த மனிதன் மாம்ச சரீரத்திலிருந்த அதே மனிதனாக வாழ்வது பரிசுத்த வேதாகம நித்தியமாகும் (மத்.8:11:22:32).

அழியாததும் முடிவில்லாததுமான அந்த உயிர் வாழும் ஒரு ஜீவன் மரிக்கின்ற தறுவாயில் ஜெபிக்கும் ஒரு ஜெபம், "கர்த்தாவே என்னை நினையும்" இது அழியாமையை மிகவும் சத்தமாக ஒலிக்கிறதல்லவா?

கிறிஸ்தவம் (Christianity) ஈடு இணையற்ற ஒரு மார்க்கமாக இன்றைக்கு திகழ்கிறது என்றால் காரணம் என்ன? "உயிர்த்தெழுந்த கிறிஸ்து ஒவ்வொரு கிறிஸ்தவனும் உயிர்தெழுதலில் பங்கடைவான் என்பதில் சந்தேகமேயில்லை அந்த உயிர்த்தெழுதல் நித்திய ஜீவனுக்கேதுவாகவே இருக்கும் என்ற ஒரு நம்பிக்கை நமக்கு அருளப்பட்டிருப்பதாக பேதுரு சொல்லுகிறார். "அவர், இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்" (1பேது.1:4).

இயேசுவின் சரீர உயிர்த்தெழுதல் ஓர் அடையாளமாகும். இயேசுவை மரணம் மேற்கொள்ள முடியவில்லை (ரோ.6:9).

மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று

அறிந்திருக்கிறோம். ஆகவே அவர் தமக்கு எதைச் செய்தாரோ அதை மற்றவர்களுக்கும் செய்ய அவரால் கூடும். அவர் சொன்னார்: "நான் பிழைக்கிற படியினால் நீங்களும் பிழைப்பீர்கள்" (யோவா.14:19) என்று.

ஆகவே, உயிர்த்தெழுதல் இல்லையென்றால் அநேக காரியங்கள் இல்லையென்றாகிவிடும் (1கொ.15:12-32). உயிர்த்தெழுதலின் முக்கியத்துவத்தை சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

**1. பிரசங்கத்திற்கு மதிப்பீட்டை கொடுக்கிறது.**

பவுல் சொல்லும் போது, கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்று பிரசங்கிக்கும்போது சிலர் மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லையென்று எப்படி சொல்லலாம். கிறிஸ்து உயிர்த்தெழாவிட்டால் எங்கள் பிரசங்கம் விருதா என்றான்.

பெந்தெகொஸ்தே நாளில் பரி. ஆவியாவனரால் நிரப்பட்டவுடன் அவர்களுடைய செய்தி, இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை பற்றியதாகவே இருந்தது (அப்.2:22-32). இரண்டாம் சுவிசேஷ பிரசங்கத்திலும் இது வலியுறுத்தப்பட்டது (அப்.3:15). தொடர்ந்து அப்.5:30, 10:40,41, 13:23,30,32,37) இந்தப் பகுதிகளில் உயிர்த்தெழுதலை மிகவும் வலியுறுத்தியே பேசியுள்ளனர்.

கிறிஸ்து உயிர்த்தெழவில்லையென்றால் அவர்களுடைய பிரசங்கத்தில் எந்த மதிப்பீடும் கண்டிப்பாக இருந்திருக்க முடியாது. அப்பொழுது மாத்திரமல்ல இப்பொழுதும் கூட தேவனுடைய நற்செய்தி இந்த உயிர்த்தெழுதலின் வல்லமையோடு வருகிறது.

**2. விசுவாசத்தின் சாராம்சம்.**

"கிறிஸ்து உயிர்த்தெழுவில்லையென்றால் விசுவாசம் விருதா" (1கொ.15:14) என்று பவுல் சொல்லுகிறார். நம்முடைய விசுவாசத்திற்கு ஏதோ ஒரு சான்று தேவை. அவர்கள் (அப்போஸ்தலர்கள்) விசுவாசித்து உறுதிப்படுத்தியிருப்பதாக சொல்லுகிறார்கள். எதை? கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை. ஆகவே நம்முடைய விசுவாசத்திற்கு போதுமான சான்று நமக்களிக்கப்பட்டிருக்கிறது. "கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினால் அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்தில் விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்" (ரோ.10:9).

இங்கு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல், நம்முடைய விசுவாசத்திற்கு போதுமான சான்றாக விளங்குகிறது.

**3. உயிர்த்தெழுதல் நமக்கு இரட்சிப்பின் வாக்குத்தத்தைக் கொடுக்கிறது.**

"உயிர்த்தெழாவிட்டால், நீங்கள் இன்னும் பாவத்தில் நிலை நிற்பீர்களே" (1கொ.15:17). அவர் நம்முடைய மத்தியஸ்தராக இருக்கும் நிலையையும் இழந்தவராகி விடுவார். இரட்சிப்பின் வாக்குத்தத்தம் பொய்மையாகிவிடும் (எபி.8:6).

**4. நம்பிக்கைக்கு ஊக்கமளிக்கிறது.**

நமக்கருமையானவர்களை சரீரத்தில் நாம் இழந்து போயிருந்தாலும் உயிர்த்தெழுதலில் நாம் அவர்களோடு ஒன்றாக்கப்படுவோம் என்ற நம்பிக்கை (1கொ.4:13-18). நம்முடைய துன்பத்திலும் நமக்கு ஊக்கமளிக்கிறது.

**5. கிறிஸ்தவ ஜீவியத்திற்கு ஒரு நோக்கத்தை கொடுக்கிறது.**

இம்மைக்காக மாத்திரம் கிறிஸ்துவின் மீது நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், மிகவும் பரிதாபத்திற்கேதுவானவர்களாயிருப்போம் (1கொ.15:19). நம்முடைய

தாலந்துகளை நாம் பிரயோசனப்படுத்துவதும் நேரத்தை மற்றும் வீணடிக்காமல் அதை ஆதாயப்படுத்துவதும் நம்முடைய ஜீவியத்திற்கு ஒரு நோக்க மிருப்பதை வெளிப்படுத்துகிறது.

நாம், நம்மைக்குறித்து தேவனுக்குக் கணக்கொப்புவிக்க வேண்டும். கிறிஸ்துவின் நியாயாசனத்துக்கு முன் நிற்க போகிறோம் இந்த நோக்கம் நமக்கு இல்லையெனில், நாம் “புசிப்போம், குடிப்போம் நாளைக்கு சாவோம் என்று வீணான வாழ்க்கையை வாழ்ந்து மடிந்து போவோமல்லவா.

**6. ஞானஸ்நானத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது.**

உயிர்த்தெழுதல் ஞானஸ்நானத்துடன் எப்பொழுதும் தொடர்புடையதாக இருக்கிறது. மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலின் பங்கு ரோம.6:2-5. உயிர்த்தெழுதல் இருப்பதால்தான் ஞானஸ்நானம், அதின் நோக்கத்தில் சரியாக செயலாற்றுகிறது.

**7. அர்ப்பணிப்பான சேவைக்கு நியாயமாக நம்மை ஒப்புக்கொடுக்கிறது.**

1.“நாங்களும் ஏன் எந்நேரமும் நாச மோசத்திற்கு ஏதுவாயிருக்கிறோம்” (1கொ.15:30). ஆண்டவருக்கு ஊழியம் செய்வதால் ஏற்படும் ஆபத்துக்களை பவுல் நன்கறிந்திருந்தார். நாளைய தினமில்லாமலிருந்தாலும் அர்ப்பணிப்பான ஒரு ஜீவியத்தில் தம்மை ஒப்புக்கொடுத்திருப்பதை அவர் கைவிடவேயில்லை.

கிறிஸ்தவனாக பாடுபட்டால் அவனுக்கு ஆசீர்வாதமுண்டு (1பேது.4:12,13).

உயிர்த்தெழுதல் இந்த அர்ப்பணிப்பான ஜீவியத்துக்கு ஒரு அர்த்தத்தைக் கொடுக்கிறது.

2. உயிர்த்தெழுதலின் வல்லமை

ஆண்டவருடைய உயிர்த்தெழுதலைப் பற்றி நிச்சயித்துக் கொண்ட அப்போஸ்தலர்களுடைய வாழ்க்கையில் என்ன மாற்றம் ஏற்பட்டது. ஜீவியத்தின் மாறுதல்கள் என்ன? ஒரு உண்மையைப் பாருங்கள் தோமா, முதன் முதலில் இதை நம்பவேயில்லை. மற்றவர்கள், நாங்கள் ஆண்டவரைக் கண்டோம் என்று அறிவித்தபோது, அவர் அதை நம்பவில்லை. அதன் பிறகு, அவருடைய செயல் என்னவாயிருந்தது? யோவான் 20:28ஐ வாசிக்கும் பொழுது “தோமா அவருக்குப் பிரதியுத்தரமாக: என் ஆண்டவரே என் தேவனே! என்றார் ஆண்டவரைப் பற்றிய எந்த சந்தேகமும் அதன் பின்பு அவருக்கு ஏற்படவே இல்லை.

1. அவர்களுடைய மாற்றம்.

அவர்கள் பயத்துடன் காணப்பட்டனர் (யோவா.20:19). கதவுகளை அடைத்து யூதர்களுக்கு பயந்து ஒரு அறைவீட்டில் இருந்தனர். சில வாரங்களில் அவர்களுடைய இந்த பயம் நீங்கிப்போய் தெளிவுடன் காணப்பட்டனர். அப்போஸ்தல நடபடிகள் முதல் அதிகாரத்தில் இதை காணமுடியும். இயேசு பரத்துக்கேறிப் போனபின்பு, அவர்கள் எந்தச் சூழ்நிலையிலும் கதவுகளை அடைத்துக் கொண்டு பயந்து காணப்பட்டதாக பார்க்கவே முடியாது (அப்.1:12-26). அவர்கள், பரிசுத்தாவியானவர் வர காத்திருக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர். அதைப் போலவே யூதாஸின் இடத்திற்கு வேறொருவரை தேர்வு செய்வதிலும் தீவிரமாக இருந்தனர். எந்தச் சூழ்நிலையிலும் பயப்படவில்லை. அவர்களுக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கும் மகத்தான பணிக்கு ஆயத்தமாக்கப்பட்டனர். அடுத்த அத்தியாயத்திலேயே கிறிஸ்துவை பிரசங்கித்தனர். எந்த இடத்தில் தெரியுமா? எங்கு

தேவக்குமாரனாகிய கிறிஸ்துவை சிலுவையிலறைந்து கொன்றார்களோ அதே பட்டணத்தில். இதற்கு காரணம், உயிர்த்தெழுதலின் வல்லமை. இது ஒரு மாபெரும் மாற்றமில்லையா?

2. அவர்கள் சந்தித்த சில எதிர்ப்புகள்.

யூத மத தலைவர்கள் அவர்களை எதிர்த்து நிற்க அதிக நாட்கள் பிடிக்கவில்லை. அப்போஸ்தலர்களின் போதனைகளை எதிர்த்தார்கள். ஆண்டவரை எதிர்த்தார்கள். நீங்கள் பார்க்கலாம், அவர்களைப் பிடித்து காவலில் போட்டு வைத்தனர் (அப்.4:3). இந்த அதிகாரத்தின் பின்னால் பார்த்தால் அவர்களை அழைத்து, இயேசுவின் நாமத்தினால் போதனை செய்யக் கூடாது என்று கண்டித்து அனுப்பப்பட்டனர் (அப்.4:18). இந்த எதிர்ப்புகளை அவர்கள் நாள் தோறும் சந்தித்தனர். அவர்கள் என்ன செய்தார்கள் இதை எப்படி சமாளித்தார்கள். அவர்களுடைய பதில் மிகவும் எளிதாயிருந்தது. "நாங்கள் கண்டதையும் கேட்டதையும் பேசாமலிருக்க கூடாதே" (அப்.4:20) என்றனர். எதிர்ப்புகள் அதிகமாயிருந்ததினால் இந்த அப்போஸ்தலர்கள் தோற்றுப் போய், பின் வாங்கவில்லை. அடுத்த அதிகாரத்திலேயே அவர்கள் உயிர்த்தெழுந்த இயேசுவை கண்டு கொண்டபடியினால், மக்களிடத்தில் அந்த சத்தியத்தை இன்னும் பலமாக சொன்னார்கள்.

3. அப்போஸ்தலர்களுடைய தண்டனை.

அவர்கள் சத்தியமில்லாதவைகளோடு சமாதான உடன்படிக்கை செய்து கொள்ளாமல் அவைகளை எதிர்த்தபடியினாலே, மரணத்துக்கேதுவான தண்டனைகள் அவர்களுக்கு கிடைத்தது.

பவுலுடைய ஜீவியத்தில், இந்த உலகத்தில் எவையெல்லாம் இலாபமாயிருந்ததோ அவைகளை கிறிஸ்துவுக்காக குப்பை, நஷ்டம் என்று விட்டு விட்டதாகச் சொல்லுகிறார். பவுல் பட்ட பாடுகள் கொஞ்சமல்ல இந்தப்பாடுகளை அவர்கள் பொறுமையோடு சகித்துக் கொள்ளக் காரணம் உயிர்த்தெழுதலின் வல்லமையை அவர் உணர்ந்திருந்தார். தனக்கு உறுதியில்லாத ஒன்றுக்காக பாடுகளை அனுபவிப்பது மதியீனம். நிச்சமான ஒன்று அவர்களுக்கு புரிந்திருந்தது அதுவே உயிர்த்தெழுதல் (2கொ.11:23-25).

**கிறிஸ்தவனும் உயிர்த்தெழுதலும்.**

யோபு கேட்கிறார் "மரணத்துக்குப் பின் மனுஷனோ வென்றால் அவன் எங்கே" (யோபு14:10).

மனிதன் சரீரத்தை விட மேலானவன். மனிதனில் விசேஷித்த ஒன்று தேவ சாயலாக சிருஷ்டிக்கப்பட்டுள்ளது (ஆதி.1:26). தேவன் மாம்சமானவரல்ல யோவா.4:24; லூக்.24:39; மத்.16:17. அவர் ஆவியாயிருக்கிறார்.

தானியேல் ஒரு முறை சொன்னார். "தன் மாம்சத்தின் நடுவில் ஆவி சஞ்சலப்படுகிறது என்று" (தானி.7:15). மனதின் உணர்வுகளில் ஒன்று சஞ்சலம். இது சரீரத்தில் ஏற்படுவதல்ல.

பவுல் சொல்லும்போது, "மனுஷனிலுள்ள ஆவியேயன்றி எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்? என்கிறார். மனுஷனுக்குள் ஒன்று இருந்து அவனை இயக்குகிறது அது சரீரத்தை விட வேறுபட்டிருக்கிறது (யோவா.13:21; லூக்.1:47; 2கொ.16:18; எபே.3:16).

மரணத்தினால் ஒரு மனுஷனுடைய ஆவிக்குரிய பகுதியானது மாற்றப்படுவதேயில்லை.

சில உதாரணங்கள் வேதாகமத்திலிருந்து 1. ஆதி.25:8 பிற்பாடு ஆபிரகாம் நல்ல நரைவயதிலும், முதிர்ந்து பூரண ஆயுசிலும் பிராணன் போய் மரித்து தன் ஜனத்தாரோடே சேர்க்கப்பட்டான்.

இது மம்ரேயிலுள்ள முற்பிதாக்கள் எல்லோரும் அடக்கம் பண்ணப்பட்ட இடத்திற்கு போவதைப் பற்றியல்ல ஆதி.15:15 ' நீ சமாதானத்தோடே உன் பிதாக்களிடத்தில் சேருவாய்''. நியா.2:10 அக் காலத்தில் இருந்த அந்தச் சந்ததியார் எல்லோரும் தங்கள் பிதாக்களுடன் சேர்க்கப்பட்ட பின்பு என்ற இவைகள் யாவுமே, ஏதோ அடக்கம் பண்ணப் படுவதை மாத்திரம் சொல்லாமல், கல்லறைக்கு அப்பாற்பட்ட ஒரு சம்பவத்தையே குறிக்கிறது.

2. இயேசுகிறிஸ்து கூட சொல்லும் போது மத்.8:11-ல் அநேகர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வந்து பரலோக ராஜ்யத்தில், ஆபிரகாம் ஈசாக், யாக்கோபு என்பவர்களோடே பந்தியிருப்பார்கள். ஒரு வாக்குத்தத்தம் உயிரூட்டப்பட்டதாய் இராமலிருக்குமேயானால் அந்த வாக்குத்தத்தம், வாக்குத்தத்தமாக கருதப்படாது. இங்கே இந்த மகத்தான வாக்குத்தத்தத்தை பெற்றுக் கொண்டவர்கள் முற்பிதாக்களோடு ஐக்கியமாயிருக்கிறார்களா? கண்டிப்பாக ஐக்கியமாயுள்ளனர். இன்னும் தேவன் அற்பமான gwi t fY (Lesser Creatures) மீது அக்கறை காட்டுவாரேயானால் அதைப் பார்க்கிலும் விசேஷித்த மனிதன் மீது (Greater Creatures) அக்கறை காட்டுவது எவ்வளவு நிச்சயம் (மத்.6:26) தம்முடைய குமாரனையே கொடுத்தவர், அவரோடே கூட எல்லாவற்றையும் கொடுப்பார் (ரோ.8:32).

மத்.17:77 மறுரூப மலையில் இதே கருத்தை இயேசு வலியுறுத்துகிறார். இயேசு பேதுரு, யோவான், யாக்கோபு என்ற மூவரோடும் மலையில் ஏறிப்போனார் அங்கே அவர் மறுரூபமானார். மோசேயும் எலியாவும் இயேசுவோடு பேசுகிறதை பார்த்த இவர்கள். பல நூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களை அடையாளம் கண்டு கொண்டனர். பேதுரு மூன்று கூடாரங்களை (Tabernacle) போடலாம் என்று கூட சொல்லுகிறார் (மத்.17:4) இங்கே கருத்து என்னவென்றால் பூமியில் நமக்கு தனிப்பட்ட வகையில் பழக்கமில்லாதவர்களை கூட மரணத்திற்குப் பிறகு நாம் அடையாளம் கண்டு கொள்ள முடியும். மத்.25:31 கிறிஸ்து நியாயத்தீர்ப்பு நாளான அந்த மகத்தான நாளைப் பற்றி நம்மிடம் பேசுகிறார் நீதிமான்களை பார்த்து "வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகத்தோற்றத்திற்கு முன்பே ஆயத்தம் செய்யப்பட்ட தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ளுங்கள்" என்பாராம் இவைகளிலிருந்து இயேசு ஆண்டவர் நமக்கு புரியவைக்கிறார். மரணத்துக்குப்பின் சம்பவங்கள் நமக்கு கண்டிப்பாக நினைவில் வரும்.

கிறிஸ்து உயிர்த்தெழுந்ததினாலே, கிறிஸ்தவர்களுக்கும் ஒரு மகிமையின் உயிர்த்தெழுதல் உண்டு என்பதை நிச்சயமாக உறுதிப்படுத்தியுள்ளார்.

"நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன் என்னை விசுவாசிப்பவன் மரித்தாலும் பிழைப்பான்" (யோவா.11:25).

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை தாவீது சங்கீதத்தில் இப்படியாக

முன்னுரைத்தார் "என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர்; உம்முடைய பரிசுத்தவானை அழிவை காணவொட்டீர்" (சங்.16:10). "கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்து எழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற் பலனானார்" (1கொ.15:20). அப்போஸ்தலர், இயேசுவை முன்னிட்டு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதலைப் பிரசங்கித்தனர் (அப்.4:2).

நமக்கு உயிர்த்தெழுதலின் சரீரம் கொடுக்கப்படும். வசனம் சொல்லுகிறது "கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்; பல வீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும்.

"ஜென்ம சரீரம் விதைக்கப்படும் ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும். ஜென்ம சரீரமுமுண்டு ஆவிக்குரிய சரீரமுமுண்டு (1கொ.15:43,44).

"அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்படுத்திக் கொள்ளதக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்" (பிலி.3:21).

நீதிமான்களின் உயிர்த்தெழுதல்.

லூக்.14:14-ல் ஆண்டவர் இயேசு சொல்லும்போது "நீ பாக்கியவானாயிருப்பாய்; அவர்கள் உனக்குப் பதில் செய்யமாட்டார்கள்; நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் உனக்குப் பதில் செய்யப்படும் என்றார்"

"கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள் (1தெச.4:16).

பவுல் சொல்லுகிறார், "இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும் அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கு அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கு..(பிலி.3:10).

நாம் கிறிஸ்துவுடனே கூட எழுந்ததுண்டானால் கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுவோம். ஏனெனில் நாம் மரித்தோம், நம்முடைய ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது நாமும் அவரோடே மகிமையில் வெளிப்படுவோம்.

அன்றியும், நான் சிங்காசனங்களைக் கண்டேன்; அவைகளின் மேல் உட்கார்ந்தார்கள்; நியாயத்தீர்ப்புக் கொடுக்கும்படி அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது இயேசுவை பற்றிய சாட்சியினிமித்தமும் தேவனுடைய வசனத்தினிமித்தமும் சிரச்சேதம் பண்ணப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களையும், மிருகத்தையாவது அதின் சொரூபத்தையாவது வணங்காமலும் தங்கள் நெற்றியிலும் தங்கள் கையிலும் அதின் முத்திரையைத் தரித்துக் கொள்ளாமலும் இருந்தவர்களையும் கண்டேன். அவர்கள் உயிர்த்துக் கிறிஸ்துவுடனே கூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள் (வெளி.20:4).

மரண மடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை இதுவே முதலாம் உயிர்த்தெழுதல் (வெளி.20:5).

முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள் மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை;

இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து அவரோடே கூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள் (வெளி.20:6).

முடிவாக: கிறிஸ்தவத்தின் தனித் தன்மையே உயிர்த்தெழுதல் (Resurrection) நாம் கிறிஸ்துவின் இரட்சிப்பின் பெலனாகிய சுவிசேஷத்தை கேட்டு விசுவாசித்து, நம்மை செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதலில் ஒப்புக்கொடுத்து, நீதியுண்டாக இருதயத்தில் விசுவாசித்து நாம் அதை வாயினாலே அறிக்கை செய்து கிறிஸ்து இயேசுவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலின் சாயலுக்கொப்பான ஞானஸ்நானத்தில் மறுபடியும் பிறந்து பழையவைகளை ஒழித்து புது சிருஷ்டியாக மாறி அதை பவுல் (1கொ.15:58-ல்) வலியுறுத்தி சொல்லுகிறார், "ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக"

*இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்; அப்பொழுது, நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள் (யோவா.5:28,29)*

## வேதஅறிவுப்போட்டி
## எண் 100ல் வெற்றி பெற்றவர்கள்

| | |
|---|---|
| Mrs. செல்வக்குமார் | -மதுரை |
| A. ஜோதிகாந்தம் | -போடபாறை |
| Mr. பாண்டியன் | -மறவமங்கலம் |
| Mr. பாண்டியன் | -கா.கோவில் |
| E.J.R. குணசேகர் | -கடலூர் |
| Mrs. தினகரன் | -மதுரை |
| N. கமலவேணி | -அயனாவரம் |
| E. அன்பரசி | -சித்தார்பட்டி |
| J. ஜாஸ்மின் | -ஓசூர் |
| N.S. சங்கரலிங்கம் | -பாண்டி |
| N. விஜயநாதன் | -கொபாளையம் |
| Mrs. ஆலியம்மாள் | -கடலூர் |
| M. வேலு | -கீழ்முருங்கை |
| R. கிப்ஃட் | -ஒட்டநத்தம் |
| J. ஐசக் | -வ.பேட்டை |
| L. ஸ்டீபன் | -அலங்காநல்லூர் |
| M. சித்ரா | -முத்தூர் |
| R. பவுல் சாமுவேல் | -பிடாரியூர் |
| K. மோகன் | -கொபாளையம் |
| P. ஏசையன் ராஜ் | -கோபி |
| R. கஸ்தூரி | -ஒட்டநத்தம் |
| R. சாமுவேல் | -ஊதியூர் |
| M. ராமசந்திரன் | -ஒட்டநத்தம் |
| R. அருண்குமார் | -பிடாரியூர் |
| S. நிர்மலா ஜான் | -மதுரை |
| IAR. எதிராசன் | -சங்கரி |
| Mr. ஆனந்த | -மதுரை |
| D. மெர்ஸி | -கோவை |
| Mrs. மரகதம்திரவியம் | -கோம்பை |
| G. கிரேஸ்ஜெயா | -வெ.குளம் |
| E. ஜோசப் தேவதாஸ் | -நாகமலை |
| Mrs. ஜாய்கிறிஸ்டினா | -நாகமலை |
| P. முத்துசாமி | -பொ.புரம் |
| A. ஜான்சன் | -தா.பட்டி |

## வேதஅறிவுப்போட்டி
## எண் 100ன் விடைகள்

| | |
|---|---|
| 1. பொய்யைத் | -சகரி10:2 |
| 2. பவுல் | -அப்20:33 |
| 3. கன்னிகைகளையும் | -சகரி9:17 |
| 4. பவுலை | -அப்21:36 |
| 5. ஐயோ! | -மீகா2:2 |
| 6. முத்திரை | -எபே1:13 |
| 7. மல்கியா | -மல்1:10 |
| 8. கடனாளிகளல்ல | - ரோ8:12 |
| 9. மீகா | -மீகா7:19 |
| 10. பவுல் | -எபே.4:21 |

***உங்களுடைய பெயர் ஜீவபுத்தகத்தில் எழுதப்பட பிரயாசப்படுங்கள்***


*(வெளி.21:27)*

சரித்திர ஆய்வு

# சத்திய வார்த்தையில் சரித்திரம் -15

## புத்தாண்டு - New Year

John S.Nathan, Gospel Minister
Christian City Church of Christ, (Minjur) -601 203, S.INDIA.
Mobile: 94444 43378



புத்தாண்டு கொண்டாட்டங்கள் அனேகமாக உலகமெங்கும் உள்ள வெவ்வேறு இன, மத மக்களால் வெவ்வேறு கால கட்டத்தில் குறிப்பாக தங்களின் அறுவடைகால ஆரம்பத்தில் கொண்டாடப்பட்டு வருவதை நாம் நன்கு அறிவோம். எபிரெயர்களும் புத்தாண்டை கொண்டாடும் வழிமுறையை வழுவின்றி வழி வழியாக பின்பற்றினர். கிழக்கத்தியர்கள் வேதாகம அடிப்படையில் முழுமையாக அறிவிக்கக் கூடிய வகையில் இவை இருந்தாலும் அவை மாறுபடும் வகையில் இருந்துவந்தது. இவர்கள் விண்ணிற்குரிய சூரிய சந்திர நட்சத்திர இயக்கங்களின் அடிப்படையிலும், பருவ மாற்றங்கள் (Seasons) மற்றும் அவ்வப்போது கொண்டாடும் தன் இன மக்கள் கொண்டாடிடும் பண்டிகை கணக்கிடப்பட்ட அடிப்படையில் ஓர் ஆண்டில் 364-365 நாட்களையுடைய ஒரு சூரிய ஆண்டில் 12 மாதங்களாக குறிக்கப்பட்டது. போப் கிரிகரியினால் ஜீலியன் காலண்டர் திருத்தி அமைக்கப்பட்டது. இக்காலண்டரில் பிப்ரவரியில் இருந்த 30 நாட்களில் ஜீலியஸ் சீசர் பிறந்த மாதத்திற்கு 31 நாளாக (சிசரின் அறுவை சிகிச்சையால் கி.மு 63-ல் முதன் முதலில் பிறந்தவர் மார்ச்15.44 கி.மு. இறந்த சிறந்த ஆட்சியாளர். இவரின் பெரியப்பாவாகிய அகஸ்துராயன் (லூக். 2:1) தான் பிறந்த மாதத்திற்கு ஆகஸ்டு என்று பெயரிட்டு அம்மாதத்திற்கு 31 நாளாக இருக்க வழிவகை செய்யப்பட்டது.

கிரிகரி ஏற்படுத்திய காலண்டருக்கு தம் பெயரினாலே அது வழங்கிட கிரிகரியன் காலண்டர் என்று பெயரிடப்பட்டதுடன் அனேகமாக உலகமெங்கும் (இந்தியா உட்பட) ஏப்ரல் 1-ம் நாளை புத்தாண்டாக கொண்டாடிவருவதற்கு பதிலாக ஜனவரி 1-ம் நாளை புத்தாண்டாக கொண்டாடிட வழிவகுத்தார். இதனை ஆட்சியாளர்களும் மக்களினமும் ஏற்றுக் கொள்ள மறுத்ததுடன் தொடர்ந்து ஏப்ரல் 1-ம் நாளையே புத்தாண்டாக தொடர்ந்து கொண்டாடிவந்தனர். இதனால் கோபமுற்ற ஆட்சியாளர்களாலும் மதத்தலைவர்களாலும் பல இன்னல்களை அனுபவித்தனர். நீண்ட போராட்டத்திற்கு பிறகு 16-ம் நூற்றாண்டில் ஐரோப்பாவின் (ஆங்கிலேயர்கள்) எல்லா நாடுகளிலும் கிறிஸ்து பிறந்தநாளாகவும், புதிய வருடமாகவும் ஏப்ரல் 1-ம் நாளை கொண்டாடினர். இதனை தொடர்ந்து 1660-ல் ஸ்காட்லாண்டு, 1852-ல் பிரான்ஸ் நாட்டினரும், 1882, 1772-ல் நார்வே, ஜெர்மனி, டென்மார்க், ஹாலந்து நாட்டினரும் அரசாணையினை ஏற்று ஜனவரி 1-ம் நாளை

கொண்டாடிவருகிறார்கள். சமீபத்தில் இந்தியாவில் ஏப்ரல் 15-ம் தேதியை புத்தாண்டாக கொண்டாடிவந்தனர். ஆனால் தற்சமயம் தமிழக அரசு ஜனவரி 15-ம் நாளை தமிழ் புத்தாண்டாக கொண்டாட ஆணையிட்டுள்ளது.

பழை ஏற்பாட்டின் காலத்தில் யாத்.12:2-ல் இந்த மாதம் உங்களுக்கு பிரதான (முதல்) மாதம், இது உங்களுக்கு வருஷத்தின் முதலாம் நாளாயிருப்பதாக. வசனம்6-7 இந்த மாதம் பதினாலாம் தேதிவரைக்கும் ஆட்டுக்குட்டியை வைத்திருந்து, இஸ்ரயேல் சபையில் ஒவ்வொரு கூட்டத்தாரும் சாயங்காலத்தில் அதை அடித்து... தாங்கள் அதை புசிக்கும் வீட்டு வாசல் நிலைக்கால்கள் இரண்டிலும், நிலையின் மேற்சட்டத்திலும் தெளித்து இவ்வாறாக முதலாம் மாதத்தில் பஸ்கா பண்டிகையை கொண்டாடி இந்த முதலாம் மாதம் நிசான் மாதமாகும் மார்ச்15-முதல் ஏப்ரல்14-வரை யாத்.40:2 வசனம் 17 இரண்டாம் வருஷம் முதலாம் மாதம் முதல் தேதியில் வாசஸ்தலம் ஸ்தாபனம் பண்ணப்பட்டது.33-ம்வசனம் பின்பு, வாசஸ்தலத்தையும்... தொங்குதிரையையும் தொங்க வைத்தான் (Ohel) ஓயேல் என்ற எபிரெய வார்த்தை கூடாரம், தடுக்கப்பட்ட (மறைக்கப்பட்ட) தங்குமிடம் என்ற வார்த்தை வேதாகமத்தில் 340 முறை கூறப்பட்டுள்ளது (ஆதி.4:20; 13:5,18:16; 25-27; எரே.6:3; நியா.4:17 1சாமு.17:54: சங்.91:10; ஏசா.16:5, 54:2 மற்றும் பல.

பாபிலோனியர்களின் முதல் மாதமான நிசான் (Nissan) மாதத்தை கானானியர் "ஆபிப்" மாதம் என்கிறார்கள். யாத்.23:15,34:18,13:4, 40:2,7. நாகோமி தன் மருமகள் ரூத்தை பெத்லெகேமில் புத்தாண்டு, அறுவடையை காண வந்தது ரூத்1:22. வார்கோதுமை மற்றும் கோதுமையின் அறுவடை காலமாகும்.

டிசம்பர் மாதத்தில் வெளியான "கிறிஸ்மஸ்" செய்தியை வாசித்த அனேகர், அவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது என்ற கடிதம் எழுதியும், தொலைபேசியிலும் பேசினர். ஒருசிலர் கிறிஸ்தவர்கள் கொண்டாடக்கூடிய கிறிஸ்மஸ் கொண்டாடக்கூடாது என்று ஏன் எழுதினீர்கள் என்று கடிந்துகொண்டார்கள். அனைவருக்கும் எங்கள் நன்றி பண்டிகை கொண்டாடலாம் கொண்டாடக்கூடாது என்று கூறுவது எங்கள் நோக்கம் அல்ல.

தேவன் நம்மீது பிரியமாயிருக்க வேண்டுமானால், அவர் கட்டளையிட்டவைகளை மட்டுமே செய்து முடிப்போம். அவர் விரும்பாத, வேதாகமத்தில் கூறப்படாதவைகளை நாம் ஏன் கைக்கொள்ளவேண்டும்? தேவன் செய்வது எதுவோ அது என்றைக்கும் நிலைக்கும்... அதினோடே ஒன்றையும் கூட்டவுங் கூடாது அதிலிருந்து ஒன்றும் குறைக்கவுங்கூடாது "பிரச.3:14: 8:12,13; 12:3;. "வெளி.1:3...இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள்".

நாம் அனைவரும் பாக்கியவான்களாக இருக்க முயலுவோமாக!
உங்கள் அனைவருக்கும் எங்கள் இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்.

## நடப்புச் செய்திகள்

- ★ உலகில் ஆண்டுக்கு 2கோடிபேர் எய்ட்ஸ் நோய் தாக்கி இறக்கின்றனர் என்று மத்திய அரசின் தேர்வாணைக்குழு உறுப்பினர் பாலகுருசாமி தெரிவித்துள்ளார்.
- ★ கொடைக்கனலில் 20 ஆண்டுக்கு பிறகு நள்ளிரவு வெப்பநிலை ஜீரோ டிகிரியாக மாறியுள்ளது.
- ★ வெளிநாட்டு வாழ் தமிழர்கள், தமிழகத்தில் தொழில் தொடங்க வாருங்கள் என்று உலகத் தமிழர் பொருளாதார மாநாட்டில் முதல்வர் கருணாநிதி அழைப்புவிடுத்துள்ளார்.
- ★ ஆசியாவில் மிகப் பெரிய கடற்படை அதிகாரிகள் பயிற்சி மையம் கேரளாவின் எழிமலாவில் அமைக்கப்பட்டுள்ளது.
- ★ சென்னை ஓபன் போட்டியில் இதுவரை இல்லாத அளவிற்கு பரிசுத்தொகை இந்த முறை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மொத்தப் பரிசுத்தொகை ரூ2.25 கோடியாகும்.

# ஆசிரியர் கடிதம்

வாசகர்களுக்கு, 10.1.2009

நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுவின் தூயநாமத்தில் யாவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள். தேவன் ஒரு வருடத்தை நமக்கு கூட்டி வழங்கியுள்ளார். நாம் ஆண்டவருக்காக செய்யவேண்டிய பணிகள் அதிகமாக உள்ளது.

இவ்வருடம் 3000 பிரதிகள் அச்சிட்டுள்ளோம். அனைவருக்கும் புது வருட காலண்டர் அனுப்ப திட்டமிட்டுள்ளோம். பெற்றுக்கொள்ளாதவர்கள் உடனே ரூ10/- மணியாடர் செய்து பெற்றுக்கொள்ளவும்.

இவ்வருடத்தில் மாதந்தோறும் ஒரு மாவட்டத்தில் சுவிசேஷகூட்டம் நடத்த ஊழியர்கள் சிலர் கூடி ஜெபித்து, ஆலோசித்துள்ளோம். கர்த்தர் காரியங்களை வாய்க்கச்செய்வாராக!

உங்களுக்காகவும் உங்களுடைய குடும்பங்களுக்காகவும் மாதத்தில் இரண்டாவது புதன் கிழமை சபையாக கூடி ஜெபித்துவருகிறோம். 2009 -ம் வருட காலண்டரில் 11 ஊழியர்களை அறிமுகம் செய்துள்ளோம் அந்தந்த மாவட்டத்தில் உள்ள சகோதர சகோதரிகள் அவர்களோடு தொடர்பு கொண்டு சத்தியத்தை அறிந்து வளருங்கள். உங்களால் முடிந்த உதவியை அவர்களுக்குச் செய்யுங்கள். இம்மாதம் 13,14 தேதிகளில் ஜெபக்கூட்டங்கள் நடைபெறவுள்ளது தொடர்பு கொண்டு கலந்துகொள்ளுங்கள்.

உங்களுக்காக ஜெபிக்கும் தம்பதியர்,
அர்ஜுன் குளோரி



# நாம் அதை எளிதாய் ஜெயித்துக்கொள்ளலாம்

சிறுவர் பகுதி

வேதபகுதி:எண்ணாகமம் 13:27-33

*Bro. K.MOHAN*
*281/ Opp Power Office,*
*B.Komarapalayam -638 183*
*Mobile No: 93642 02750*

அருமைப் பிள்ளைகளுக்கு நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். தேவனிடத்தில் விசுவாசம் வைத்த அநேகரை குறித்து வேதாகமம் சாட்சியிடுகிறது. அவர்களில் யோசுவாவும், காலேபும் குறிப்பிடப் பட்டவர்கள். எப்படியென்றால் கர்த்தர் மோசேயை நோக்கி: கானானை சுற்றிப் பார்க்கும்படி கோத்திரத்திற்கு ஒருவராக இஸ்ரவேல் புத்திர தலைவர்களை அனுப்பச் சொன்னார். கானானை சுற்றிவிட்டு வந்த கோத்திரப்பிதாக்களின் தலைவர்கள் என்ன சொன்னாங்கனு தெரியுமா? ஐயோ அந்த தேசத்திலே குடியிருக்கிறவங்க பலவானுங்க, அந்த பட்டணங்களும் அரணிப்பானதும் பெரியதுமா இருக்கு மேலும் அங்கே ஏனோக்கின் குமாரரையும் கண்டோம். நாங்கள் போய்ச் சுற்றிப் பார்த்து வந்த அந்த தேசம் தன் குடிகளைப் பட்சிக்கிற தேசம்; நாங்கள் அதிலே கண்ட ஜனங்கள் எல்லாரும் மிகவும் பெரிய ஆட்கள். அங்கே இராட்சதப் பிறவியான ஏனோக்கின் குமாரராகிய இராட்சதரையும் கண்டோம்; நாங்கள் எங்கள் பார்வைக்கு வெட்டுக்கிளிகளைப்போல் இருந்தோம், அவர்கள் பார்வைக்கும் அப்படியே இருந்தோம் என்று சொல்லி, இப்படி இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே தாங்கள் சுற்றிப் பார்த்துவந்த தேசத்தைக்குறித்து துர்ச்செய்தி பரம்பச் செய்தார்கள்.

ஆனா நம்பிக்கையில் தளர்ந்துபோகாதிருந்த யோசுவா மற்றும் காலேப் என்ன சொன்னாங்க தெரியுமா? நாம் உடனே போய் அந்த பட்டணங்களை சுதந்தரித்துக்கொள்வோம்; **நாம் அதை எளிதாய் ஜெயிக்கலாம்** என்றார்கள். பரிட்சை எழுதப்போகிற மாணவ மாணவிகளைக் கேட்கும்போது என்ன சொல்லுவாங்க? நான் பாஸ் பண்ணிடுவேன் என்பர். ஆனால் அதில ஒரு சிலர் இருப்பாங்க நான் என்னத்த பாஸ் பண்ணப்போறேன், ஒன்னுமே சரியா படிக்கவில்லடா என்று சொல்லுவாங்க. அதே போல பாஸ் பண்ணாமலே போய்டுவாங்க. அதைப்போல அவனோடேகூடப் போய்வந்த மனிதரோ; நாம் போய் அந்த ஜனங்களோடே எதிர்க்க நம்மாலே கூடாது; அவர்கள் நம்மைப்பார்க்கிலும் பலவான்கள் என்றார்கள். நீங்கள் எப்படிப்பட்டவர்கள்? பலவான்களா அல்லது பலவீனர்களா? யோசுவா, காலேபைப் போல பலவான்களாக இருக்க பிரயாசப்படுவோம்.

**மனப்பாட வசனம்**
**"ஜாக்கிரதையுள்ளவர்களுடைய கை ஆளுகைசெய்யும்; சோம்பேறியோ பகுதிகட்டுவான்" (நீதி.12:24)**

# வேத அறிவுப் போட்டி எண். 101

**போட்டியாளர்கள் கவனத்திற்கு,**

கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25ம்தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.

1. நான் பிதாவானால் என் கனம் எங்கே? நான் எஜமானானால் எனக்குப் பயப்படும் பயம் எங்கே என்று சேனைகளின் கர்த்தர் தமது நாமத்தை அசட்டைபண்ணுகிற எவர்களைக் கேட்கிறார்?
2. இஸ்ரவேலர் தேடுகிறதை அடையாமலிருக்கிறார்கள்; தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ அதை என்ன செய்திருக்கிறார்கள்?
3. தன் வீட்டுக்குப் பொல்லாத ஆதாயத்தைத் தேடுகிறவனுக்கு என்ன ?
4. சகோதரரே, நாம் அடிமையானவளுக்குப் பிள்ளைகளாயிராமல், எவளுக்கே பிள்ளைகளாயிருக்கிறோம்?
5. அக்காலத்திலே உன்னைச் சிறுமைப்படுத்தின யாவரையும் தண்டிப்பேன் என்று எந்த தீர்க்கன் மூலம் கர்த்தர் பேசினார்?
6. புருஷன் ஸ்திரீயிலிருந்து தோன்றினவனல்ல, ஸ்திரீயே எவனிலிருந்து தோன்றினவள்?
7. துன்மார்க்கன் தன்னைப் பார்க்கிலும் நீதிமானை விழுங்கும்போது நீர் மௌனமாயிருக்கிறதென்ன? என்று எந்த தீர்க்கன் தரிசனமாய்க் கண்ட பாரம்?
8. காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய எவரைத்தேவன் அனுப்பினார்?
9. கர்த்தராகிய ஆண்டவருக்கு முன்பாக மௌனமாயிருங்கள் என்று எந்த தீர்க்கன் சொல்லுகிறான்?
10. ஆக்கினைத்தீர்ப்புக் கொடுக்கும் ஊழியம் மகிமையுள்ளதாயிருந்தால், நீதியைக் கொடுக்கும் ஊழியம் எப்படிப்பட்டதாயும் இருக்குமே என்றார் பவுல்?

**"நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்" (மத்தேயு 5:14).**

Owned and published by B.Arjunan from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu - 624 202 and printed by R.Sathiyamoorthy at Bharathi Press14/13/24 melamanthai street, Batlagundu - 624 202.
Editor: B.Arjunan.

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2009-2011
Posted
at Batlagundu Post Office
on 10th Jan.2009.

**BATLAGUNDU CHURCH OF CHRIST**
*MEETS HERE*
**17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202,**
**DINDIGUL DISTRICT, S.INDIA.**
Phone : 04543 263278, Mobile: 94435 58041
e-mail: thewordofchrist@sancharnet.in

**ஆராதனை நேரம் ஞாயிறு காலை 8.30 மணி**
**தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள**
**யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்**

**உங்கள் வானொலியில்**
**இலங்கை ஆசிய சேவை SW 25 மற்றும் 41 மீட்டரில் ஒவ்வொரு**
**புதன் மாலை 5.45 முதல் 6.00 மணி வரை கேளுங்கள் மேலும்**

**உங்கள் தொலைக்காட்சியில்**
**TAMILAN TV - Every Monday 6.00 - 6.15 a.m**
**IMAYAM TV - Every Tuesday 6.30 - 6.45 a.m**
**IMAYAM TV - Every Thursday 6.15 - 6.30 a.m**

**மாத இதழ் மற்றும் வேதபாடம்**
**தேவைக்கு உடனே ரூ.15/-**
**அனுப்பி பெற்றுக்கொள்ளவும்**

**டிவி மற்றும் ரேடியோவில் வெளி வந்த**
**தேவ செய்திகள் அடங்கிய சிடி மற்றும்**
**டிவிடிக்கள் தேவைப்படுவோர் ரூ.100/-**
**அனுப்பி பெற்றுக்கொள்ளவும்**

**அனைத்து தொடர்புக்கும்**

**Monthly Magazine**

To

*If undelivered please return to:*
From

Editor
THE WORD OF CHRIST
P.O.Box-5
Batlagundu - 624 202
S.INDIA.